நாள் 04.04.18 சி.சி 187/17 அசா 1

நான் தற்போது கோயமுத்தூரில் உள்ள குனியமுத்தூரில் குடியிருக்கிறேன். உடுமலைப்பேட்டையில் உள்ள ஜல்லிப்பட்டியில் 1.37 ஏக்கர் பூமி என்னுடைய தகப்பானரால் தான செட்டில்மெண்ட் செய்த வகையில் எனக்கு பாத்தியமாக உள்ளது. அந்த பூமிக்கு மின் இணைப்பு எண் 245 என்னுடைய பெயரில் இருந்தது. என்னுடைய கணவர் கோயமுத்துரில் அர்ச்சுனா அமராவதி சிட்பண்ட் சீட்டு போட்டிருந்தார். அதில் 6 லட்சம் ரூபாய் நிலுவை தொகை இருந்ததால் அந்த 6 லட்சம் ரூபாய் நிலுவைத் தொகைக்காக எனக்குச் சொந்தமான அந்த பூமியினை அந்த சீட்டு கம்பெனியின் மஜேனருக்கு பவர் எழுதி கொடுத்திருந்தால். அந்த பவரானது அடமானத்திற்காக கொடுக்கப்ட்டது. அந்த பவர் பத்திரத்தின் மூலும் என்க சொன்தமான இடர்தை அந்த சீட்டு கம்பெனியின் ஓனர் கோபாலகிருஷ்ணனுக்கு விற்று விட்டார். எனக்கு சொந்தமான பூமியில் உள்ள மின்சார இணைப்பை கோபாலகிருஷ்ணன் தன்னுடைய பெயருக்கு மாற்றுவதற்காக என்னுடைய கையெழுத்தை மோசடியாக போட்டு விட்டார். அந்த மின் இணப்பின் அப்போதைய மதிப்பு ரூபாய் 1 லட்சத்து 75 ஆயிரம் ஆகும். அந்த மோசடி கையெழுத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட மனுவின் பெயரில் என் பெயரில் உள்ள மின் இணைப்பானது கோபாலகிருஷ்ணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதன்பிறகு 2012 வரும் சனவரி மாதம் என்று நினைக்கிறேன் தேதி எனக்கு சரியாக நியாபகம் இல்லை அந்த சமயத்தில ஆஜர் எதிரி கோபாலகிருஷ்ணன் மின் இணைப்பு உள்ளிட்ட பெயர்களை தன்னுடைய பெயருக்கு மாற்றிவிட்டதாகவும் அது சம்மந்தப்பட்ட மற்ற ஆவணங்களை தன்னிடம் இருந்தால் அதை கொடுக்கும்படி என்னிடம் கேட்டார். அப்போதுதான் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யயப்பட்ட விவரம் தெரிய வந்நதது. அதற்கு பிறகு நான் ஈபி ஆபிஸ் சென்று விசாரித்தேன். அப்போது 2008 வருடம் பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்கள். அப்போது அங்கு ஒப்படைக்கப் பெற்றிருந்த ஆஜர் எதிரி சம்மந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்துவிட்டு அதிலுள்ள கையெழுத்து என்னடையது இல்லை என்று உறுதிப்படுத்தினேன். அதன் பிறகு இதன் சம்மந்தமாக திருப்பூர் எஸ்பி ஆபிஸில் ஒரு மனு கொடுத்தேன். 2012 என்று நினைக்கிறேன். தேதி நியாபகம் இல்லை. அந்த மனு நீதிமன்றத்தில் இருப்பதுதான் அது அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பப்படுகிறது. இது சம்மந்தமாக அந்த புகாரானது உடுமலை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் அடிப்படையில் என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

கு.வி- இல்லை

நாள் 04.04.18 சி.சி 187/17 அசா 2

நான் கோயமுத்தூரிலுள்ள குனியமுத்தூரில் குடியிருந்து வருகிறேன். பிளாஸ்டிக் தொழில் செய்து வருகிறேன். அசா1 எனக்கு மனைவி ஆவார். என்னுடைய மனைவிக்கு உடுமலை தாலுக்கா முக்கூடு ஜல்லிப்பட்டியில் 1.37 ஏக்கர் அளவில் தோட்டம் உள்ளது. அந்த தோட்டத்தில் 1 லட்சத்து 75 ஆயிரம் மதிப்புள்ள மின் இணைப்பும் மனைவியின் பெயரில் இருநந்தது. கோயமுத்தூரில் உள்ள காந்திபுரத்தில் அர்ச்சுனா அமராவதி சீட்டு கம்பெனியில் சீட்டு போட்டிருந்தேன். அந்த வகையில் 6 லட்சம் ரூபாய் நிலுவையில் இருந்ததது. அந்த நிலுவைத் தொகைக்காக தன் மனைவி பெயரில் இருந்த மேற்படி பூமியை சீட்டு கம்பெனியின் மேலாளர் ஸ்ரீதர் என்பவர் அடமானமாக பவர் பத்திரம் பெற்றுக் கொண்டார். ஸ்ரீதர் மேற்படி பூமியை கம்பெனி ஓனர் மகனான தினேஷ் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்து விட்டார்.அதற்கு பின்னிட்டு ஆஜர் எதிரியான கோபாலகிருஷ்ணக்கு தினேஷ் விற்று விட்டார். அதன் பிறகு ஆஜர் எதிரி கோபாலகிருஷ்ணன் மோசடியாக என் மனைவியின் கையெழுத்தை போட்டு மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்காக மனுவை மின்சார வாரியத்தில் தாக்கல் செய்திருந்தார். 2012 ம் வருடம் ஆஜர் எதிரி கோபாலகிருஷ்ணன் என்னுடைய வீட்டிற்கு வந்து மின் இணைப்பை தன்னுடைய பெயருக்கு மாற்றி விட்டதாகவும் மற்ற ஆவணங்கள் எதுவும் உள்ளதா எனக் கேட்டார். அப்போது தான் அவர் செய்திருந்த மோசடி தெரிந்தது. அதன் பிறகு மின் வாரியத்திடம் தகவல் பெறும் சட்டத்தின் அடிப்படையில் மின் பெயர் மாற்ற தகவலைப் பெற்று பரிசீலித்து பார்த்தபோது என் மனைவியின் கையெழுத்தை ஆஜர் எதிரியே மோசடியாக போட்ட தெரிய வந்தது. அதன் பிறகு இதன் சம்மந்தமாக திருப்பூர் மாவட்ட கண்காணிப்பாளரிடம் என்னுடைய மனைவி எழுத்து மூலமாக ஒரு புகாரை கொடுத்திருந்தார். அந்த புகாரானது உடுமலை காவல் நிலையதிற்கு அனுப்பபப்பட்டு எங்களை கூப்பிட்டு விசாரித்தார்கள் நாங்கள் நடந்ததைக் கூறினேன்.

கு.வி- இல்லை

நாள் 04.04.18 சி.சி 187/17 அசா 3

நான் உதகையில் மின் பகிர்மான கணக்கு அலுவலராாக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் நான் உதவி கணக்கு அலுவலராக தமிழ்நாடு மின்சார அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தேன். 03.04.2013 ம் தேதி நீதிமன்ற உத்தரவின் பேரில் உடுமலை காவல் ஆய்வாளர் வந்து என்னை விசாரித்தபோது கோபாலகிருஷ்ணன் என்பவர் மின் இணைப்பு பெயர் மாற்றம் பற்றி என்னிடம் விசாரித்தார்கள். அது சம்மந்தப்பட்ட தகவலை நான் சொன்னேன். அது சம்மந்தப்பட்ட தகவல்களை நான் கூறினேன். மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கு அந்த இடத்தை விற்றவர் வரவேண்டிய அவசியம் இல்லை என்றும் அந்த இடத்தை கிரயம் பெற்றவர் மற்றும் அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் போதும் என்று காவல் ஆய்வாளரிடம் கூறினேன். மேலும் இந்த பெயர் மாற்றமானது 29-05-08 ம் தேதி பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தது அது சம்மந்த 2013 வருடம் என்னிடம் விசாரித்தார்கள். மேலும் நீதிமன்ற உத்தரவின் பேரில் பெயர் மாற்றம் செய்வதற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவின் ஆவணங்களை விசாரணை நீதிமன்றததில் காவல் ஆய்வாளர் பெற்று சென்றார். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தனர். நான் நடந்ததைக் கூறினேன்.

கு.வி- இல்லை

நாள் 04.04.18 சி.சி 187/17 அசா 4

நான் தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் தளி பிரிவில் உதவி பொறியாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக 03.04.2013 ம் தேதி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அந்த தேதியில் நான் உதவி பொறியாளராக பூலாங்கிணறு பிரிவில் பணிபுரிந்து வந்தேன். சர்வீஸ் நம்பர் 309002245 என்ற சர்வீசுக்கு கோபாலகிருஷ்ணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ததது பற்றி விசாரித்தார். அந்த சர்வீஸ் பெயர் மாற்றத்தில் என் பங்கு என்னவென்றால் அவர் விசாரித்தபோது நான் தெரியப்படுத்திய விவரம் என்னவென்றால் உதவி கணக்கு அலுவலர் அலவலகத்தில் மனு தாக்கல் செய்யப்படும் மனுக்களில் மின் பகிர்மான பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்தை பரிசிலீத்த பின் எங்கள் அலுவலகத்திற்கு ரூ.200/- டிமாண்ட் வசூல் செய்ய அந்த மனுவை எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பார்கள் . அந்த மனுவைப் பெற்றுக் கொணடு டிமாண்ட் தொகையான ரூ.200/ -யை வசூல் செய்து ரசீது கொடுத்தப் பிறகு சோதனை அறிக்கை தருவோம். அந்த சோதனை அறிக்கையை நாங்கள் பூர்த்தி செய்து உதவி கணக்கு அலுவலருக்கு அனுப்பி வைப்போம். அதன் பிறகு உதவி கணக்கு அலுவலர் மாற்றம் செய்வார். இந்த விவரத்தை காவல் ஆய்வாளரிடம் கூறினேன்.

கு.வி- இல்லை